பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

10 06 2024 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டு மக்கள் அனைவரது வாழ்க்கையையும் சிறப்பானதாக மாற்ற அனைத்து முயற்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. சிக்கிம் முதலமைச்சராக தொடர்ந்து இரண்டாவது முறையாக திரு. பிரேம்சிங் தமாங் இன்று பதவியேற்கிறார்.

3. ஒடிசாவின் புதிய முதலமைச்சரை தேர்வு செய்வதற்கான மேலிடப் பார்வையாளர்களாக மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங் மற்றும் திரு. பூபேந்தர் யாதவை பிஜேபி நியமித்துள்ளது.

4. பிரிக்ஸ் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் ரஷ்யாவில் இன்று தொடங்குகிறது.

5. **Helibronn Neckarcup** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சுமித் நாகல் பட்டம் வென்றார்.

*---- இனி விரிவான செய்திகள் --*

<<<<>>>>

நாட்டு மக்கள் அனைவரது வாழ்க்கையையும் சிறப்பானதாக மாற்ற அனைத்து முயற்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மூன்றாவது முறையாகப் பிரதமராகப் பதவியேற்ற பின் அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த புதிய அமைச்சரவை இளைஞர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்தவர்கள் என இருதரப்பினரின் சங்கமமாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

நாட்டை வளர்ச்சியின் புதிய உயரங்களுக்கு கொண்டு செல்ல உறுதிபூண்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்தியா எப்போதும் நட்பு நாடுகளுடன் இணைந்து மனிதகுலத்தின் நலனுக்காக பணியாற்றும் என்றும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

முன்னதாக நாட்டின் பிரதமராக திரு நரேந்திர மோடி தொடர்ந்து மூன்றாவது முறையாக நேற்று மாலை பதவியேற்றார்.

புதுதில்லியில் குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

புதிய அமைச்சரவையில் 33 பேர் புதிதாக இடம்பெற்றுள்ளனர். மத்திய அமைச்சரவையில் பிஜேபியை சேர்ந்த 60 பேரும், கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த 11 பேரும் இடம்பெற்றுள்ளனர்.

கேபினட் அமைச்சர்கள் 30 பேரும், தனி பொறுப்புடன் கூடிய இணையமைச்சர்களாக 5 பேரும், இணையமைச்சர்களாக 36 பேரும் பதவியேற்றுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு அமித்ஷா, திரு நிதின்கட்கரி, டாக்டர் ஜெய்சங்கர், திரு பியூஷ் கோயல், திரு தர்மேந்திர பிரதான், திருமதி நிர்மலா சீதாராமன், திரு ஜெ பி நட்டா, திரு சிவ்ராஜ் சிங் சௌகான், திரு மனோகர் லால் கட்டார், டாக்டர் வீரேந்திர குமார், திரு பிரல்ஹாத் ஜோஷி, திரு கிரிராஜ் சிங், …

… திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா, திரு கிஷன் ரெட்டி, திரு கிரண் ரிஜிஜு, திரு சர்பானந்த சோனாவால் உள்ளிட்டோருக்கு கேபினட் அமைச்சர்களாக குடியரசுத்தலைவர் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

மதச்சார்பற்ற ஜனதாதளம் கட்சியின் திரு ஹெச் டி குமாரசாமி, இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா கட்சியின் திரு ஜிதன்ராம் மாஞ்சி, ஐக்கிய ஜனதாதளத்தின் திரு ராஜீவ் ரஞ்சன் சிங், லோக்ஜன்சக்தியின் திரு. சிராக் பஸ்வான், தெலுகுதேசம் கட்சியின் திரு. ராம்மோகன் நாயுடு ஆகியோரும் கேபினட் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

பிஜேபியைச் சேர்ந்த திரு ராவ் இந்தர்ஜித் சிங், திரு ஜிதேந்திர சிங், திரு அர்ஜுன் ராம் மெக்வால், ஷிண்டே பிரிவு சிவசேனாவின் திரு பிரதாப் ராவ் யாதவ், ராஷ்ட்ரிய லோக்தள் கட்சியின் தலைவர் திரு ஜெயந்த் சௌத்ரி ஆகியோர் தனிப்பொறுப்புடன் கூடிய இணையமைச்சர்களாக பதவியேற்றனர்.

டாக்டர் எல். முருகன், மீண்டும் இணையமைச்சராக பொறுப்பேற்றுள்ளார்.

கேரளாவைச் சேர்ந்த திரு சுரேஷ் கோபி, திரு. திரு ஜிதின் பிரசாத், திரு ஸ்ரீபத் நாயக், திரு பங்கஜ் சௌத்ரி, திரு நித்யானந்த் ராய், திரு கிஷன்பால், திரு சோமன்னா, திரு எஸ் பி சிங் பாஹல், திரு ராம்தாஸ் அத்வாலே, திரு ராம்நாத் தாக்கூர், திருமதி அனுப்பிரியா பட்டேல், திரு பெம்மசாணி சந்திரசேகர் உள்ளிட்டோர் இணையமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர்.

புதிய அரசு பதவியேற்பு நிகழ்ச்சியில்இலங்கை அதிபர் திரு ரணில் விக்ரமசிங்கே, மாலத்தீவு அதிபர் திரு திரு **Mohamed Muizzu, Seychelles** துணை அதிபர் **Ahmed Afif,** பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மொரிஷியர் பிரதமர் திரு **Pravint Kumar Jugnauth,** நேபாள பிரதமர் புஷ்ம கமல் தஹல் பிரச்சந்தா, பூட்டான் பிரதமர் **Tshering Tobgay** ஆகியோரும் விழாவில் பங்கேற்றனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சந்திரசூட், காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, பீகார் முதலமைச்சர் திரு நிதிஷ்குமார், …

… தெலுகுதேசம் கட்சித்தலைவர் திரு சந்திரபாபு நாயுடு, உத்தராகண்ட் முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி, உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், மணிப்பூர் முதலமைச்சர் திரு பைரேன் சிங், ஹரியானா முதலமைச்சர் திரு நயாப் சிங் சைனி, மகாராஷ்ட்ரா துணை முதலமைச்சர் திரு அஜீத் பவார் உள்ளிட்டோரும் பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

நடிகர்கள் திரு ரஜினிகாந்த், திரு ஷாருகான், திரு அக்ஷய் குமார், திரைப்பட தயாரிப்பாளர் திரு ராஜ்குமார் **Hirani**, தொழில் அதிபர்கள் திரு முகேஷ் அம்பானி, திரு கவுதம் அதானி உள்ளிட்டோரும் பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை அளித்து இந்தியா செயல்பட்டு வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

பிரதமராக திரு நரேந்திர மோடி மீண்டும் பதவியேற்ற விழாவில் கலந்துகொண்ட அண்டை நாடுகளின் தலைவர்களை கௌரவிக்கும் வகையில் குடியரசுத்தலைவர் அவர்களுக்கு விருந்து அளித்தார்.

இதில் இலங்கை அதிபர் திரு ரணில் விக்ரமசிங்கே, மாலத்தீவு அதிபர் திரு முகமது முய்ஸு, செஷல்ஸ் துணை அதிபர் திரு அகமது அபிப், பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா, மொரீஷியஸ் பிரதமர் திரு பிரவிந்த் குமார் ஜக்நாத், நேபாள பிரதமர் திரு புஷ்ப கமல் தஹால் பிரசண்டா, பூட்டான் பிரதமர் திரு ஷெரிங் டோப்கே ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத்தலைவர், புதிய அரசு பதவியேற்பு விழாவில் பங்கேற்றதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் இந்த தலைவர்கள் பங்கேற்றது, இந்தியப் பெருங்கடல் பகுதியின் நலனில் இந்தியா கொண்டுள்ள தொலைநோக்குப் பார்வைக்கு மற்றொரு சான்றாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த பகுதியிலும் உலகின் பிற பகுதிகளிலும் அமைதி மற்றும் வளத்தை மேம்படுத்துவதில், நெருங்கிய நட்பு நாடுகளும் அண்டை நாடுகளும் இந்தியாவுடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று அவர் கூறினார்.

<<<<>>>>

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள மத்திய அமைச்சர்களின் இலாகா பொறுப்புகள் இன்று அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குடியரசுத்தலைவர் மாளிகை இதற்கான அறிவிப்பை வெளியிடும்.

இந்நிலையில் புதிய அமைச்சரவையின் முதல் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

மாலையில் இந்தக் கூட்டம் நடைபெற வாய்ப்புள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சிக்கிம் முதலமைச்சராக தொடர்ந்து இரண்டாவது முறையாக திரு. பிரேம்சிங் தமாங் இன்று பதவியேற்கிறார்.

கேங்டாக்கில் உள்ள **Paljor** மைதானத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறும் நிகழ்ச்சியில், அம்மாநில ஆளுநர் திரு. **Lakshman Prasad Acharya** அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்.

புதிய அமைச்சர்களும் இன்று பதவியேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

32 உறுப்பினர்களைக் கொண்ட சிக்கிம் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் பிரேம்சிங் தமாங் தலைமையிலான சிக்கிம் கிராந்திகாரி மோர்ச்சா 31 இடங்களில் வெற்றிபெற்றது.

சிக்கிம் ஜனநாயக கூட்டணி ஒரே ஒரு தொகுதியை மட்டுமே கைப்பற்றியது.

<<<<>>>>

ஆந்திர மாநிலத்தின் முதலமைச்சராக திரு சந்திரபாபு நாயுடு நாளை மறுநாள் பதவியேற்கவுள்ளார்.

புதன்கிழமை காலை மணி 11.27க்கு கிருஷ்ணா மாவட்டம் கன்னவரத்தில் உள்ள கேசரபள்ளி தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் நடைபெறும் விழாவில் அவர் பதவியேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பதவியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகள் குறித்து விஜயவாடாவில் அம்மாநிலத் தலைமைச் செயலாளர் திரு நீரப் குமார் பிரசாத் ஆய்வு செய்தார்.

பதவியேற்பு விழாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி உட்பட பல்வேறு தலைவர்கள் கலந்துகொள்ள உள்ள நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

மாநில காவல்துறைத் தலைவர் திரு ஹரிஷ் குமார் குப்தா மற்றும் பிற உயர் அதிகாரிகள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

<<<<>>>>

ஒடிசாவில், புதிய அரசின் பதவியேற்பு விழா புதன்கிழமை நடைபெறுகிறது.

முன்னதாக பதவியேற்பு விழாவை இன்று நடத்த திட்டமிடப்பட்டு இருந்த நிலையில் தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புவனேஸ்வரில் உள்ள ஜனதா மைதானத்தில் பதவியேற்பு விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்று வருகிறது.

147 உறுப்பினர்களைக் கொண்ட ஒடிசா சட்டப்பேரவையில் 78 இடங்களைக் கைப்பற்றி பிஜேபி அங்கு ஆட்சி அமைக்க உள்ளது.

பிஜேபி மூத்த தலைவர்கள் திரு சுரேஷ் பூஜாரி, திரு மோகன் சரண் மாஜி, திரு கே.வி.சிங் தியோ உள்ளிட்டோரது பெயர்களை முதலமைச்சர் பதவிக்கு அக்கட்சி பரிசீலித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே ஒடிசாவில் சட்டப் பேரவைக் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான மத்திய பார்வையாளர்களாக மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு பூபேந்தர் யாதவ் ஆகியோரை பிஜேபி நியமித்துள்ளது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் ரியாசி மாவட்டத்தில் பேருந்து மீது தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் அந்தப் பேருந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் பேருந்தில் பயணம் செய்த 9 பேர் உயிரிழந்தனர். 33 பேருக்கு காயம் அடைந்தனர்.

சிவ்கோரி கோவிலுக்கு யாத்ரிகர்கள் சென்று கொண்டிருந்த பேருந்து மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த தாக்குதலுக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலுக்கு மத்திய அமைச்சர் திரு. அமித் ஷாவும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-கஷ்மீர் யூனியன்பிரதேச துணைநிலை ஆளுநருடன் தொலைபேசியில் பேசிய அவர், இந்த சம்பவம் தொடர்பாக கேட்டறிந்தார்.

இந்த தாக்குதலில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்று திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

யாத்ரீகர்கள் மீதான தாக்குதல் கடும் கண்டனத்திற்குரியது என்று மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

பிரிக்ஸ் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் ரஷ்யாவின் **Nizhny Novgorod** நகரில் இன்று தொடங்குகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு ரஷ்ய வெளியுறவு அமைச்சர் திரு. செர்ஜி லாவ்ரோவ் தலைமையேற்கிறார்.

இன்று நடைபெறும் கூட்டத்தில் ஏற்கனவே பிரிக்ஸ் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.

நாளைய கூட்டத்தில் விரிவுபடுத்தப்பட்ட பிரிக்ஸ் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்க உள்ளனர்.

நாளைய கூட்டத்தில் பங்கேற்க 15 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வரும் அக்டோபர் மாதம் நடைபெறும் பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்திட்டங்கள் குறித்து இந்த 2 நாள் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

<<<<>>>>

**Helibronn Neckarcup** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சுமித் நாகல் பட்டம் வென்றார்.

ஜெர்மனியில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் அவர், சுவிட்சர்லாந்தின் அலெக்சாண்டர் ரிச்சர்ட்சை 6-1, 6-7, 6-3 என்ற செட் கணக்கில் வென்றார்.

------------

**Lonato** உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டி இத்தாலியின் லொனாட்டோ நகரில் இன்று தொடங்குகிறது.

வரும் 18ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில் இந்தியா சார்பில் அர்ஜுன் தாக்கூர், குல்தீப் சன்யாசி, விவான் கபூர், பிருத்விராஜ் தொண்டைமான், மகேஸ்வரி சௌஹான் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

**<<<<The End>>>>**